# சீறூர் மன்னர்களின் பொருளாதாரநிலையும் விருந்தோம்பல் பண்பும்

**ப. குழந்தைவேலு**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

பண்டைத்தமிழரின் வாழ்வியல் கூறுகளான நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் போன்வற்றை எடுத்துக்கூறும் சான்றாதாரங்களாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்ககாலம் என்பது பல்வேறு சமூக மாற்றங்கள் தோன்றிய காலகட்டமாகும். இச்சமூக மாறுபாடுகளுக்கிடையே மக்களின் வாழ்வியயையும் மாறுபட்ட சமூகத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களையும் பற்றிக் கூறும் தன்மையில் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இனக்குழுச் சமுதாயம் எனும் அமைப்பு உடைக்கப்பட்டு பலமாற்றங்களையடைந்து வேந்தர் சமுதாயமாக மாற்றம் பெற்றுள்ளதனைச் சங்க இலக்கியங்களின் வழி தெளிவாக அறியமுடிகிறது. “காலவரையறையின் அடிப்படையில் சீறூர் மன்னர் காலத்தைப் புறநானூற்றுத் தரவுஅடிப்படையில் கி.மு.160-120 முதல் கி.பி.160-200 வரையில் என வரையறுத்துக் கொள்ளலாம். இந்தக் காலகட்டமே சங்ககால வேந்தர் ஆளுகை செலுத்திய காலகட்டமாக இருப்பதும் இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது. இந்த அடிப்படையில் வேந்தர், குறுநில மன்னர்களின் வளர்ச்சியினூடாகச் சீறூர்மன்னர் சமுதாயமும் தொடர்ந்து இருந்துவந்துள்ளதனைக் காணமுடிகின்றது. எனவே இனக்குழுச் சமுதாயம் உடைமைச் சமுதாயம் எனும் இரண்டும் அதாவது சீறூர்மன்னர், குறுநில மன்னர், வேந்தர் எனும் மூவகைச் சமுதாயங்களும் ஏககாலத்தில் நிலவியனவாக உள்ளன”[1] என்று பெ.மாதையன் குறிப்பிடுகிறார் மேற்கூறப்பட்டுள்ள இவர்களுள் சீறூர் மன்னர்களின் பொருளாதாரநிலை விருந்தோம்பல் பண்பு புறநானூற்றில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பன இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

## பொருளாதாரநிலையும் விருந்தோம்பல் பண்பும்

சீறூர்மன்னர்கள் தன்னை நாடிவரும் இரவலர்களுக்கு இல்லை என்னாது வழங்கும் இயல்புடையவர்களாவே காணப்பட்டுள்ளனர். இனக்குழுச் சமுதாயத்தில் நிலவிய உயர்ப்பண்புகளுள் ஒன்றான விருந்தோம்பல் பண்பினைக் கடைபிடித்தொழுகும் இயல்புடையவர்களான இவர்கள் தம்மிடம் பெருஞ்செல்வம் ஏதும் இல்லாதபோது தன்னிடமுள்ள பொருட்களை ஈடாகவைத்து அதன்மூலம் பெற்ற பொருளைக்கொண்டு விருந்தளித்துள்ளனர். இதனை,

> **“நெருநைவந்தவிருந்திற்குமற்றுத்தன்**
> **இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்று இக்**
> **கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்; இது கொண்டு**
> **ஈவது இலாளன் என்னாது, ஈயும்**

**வள்ளிமருங்குல் வயங்கு இழைஅணியக்**
**கள்ளுடைக் கலத்தேம் யாம் மகிழ் தூங்கச்**
**சென்றுவாய்சிவந்துமேல்வருக**
**சிறுகண் யானைவேந்துவிழுமுறவே"** **(புறம்.316:5-12)**

எனும் பாடல் வரிகளின்மூலம் அறியமுடிகிறது. அதாவது நேற்றையநாள் வந்த விருந்தினர்க்கு விருந்தளிக்க தன்னுடைய வாளை ஈடு வைத்தான். இன்றைக்கு ஏதும் கொடுக்கமாட்டான் என்று எண்ணவேண்டாம் இன்றும் நீங்கள் சென்றால் தன்னிடம் உள்ள சீறியாழை ஈடாகவைத்து நீங்கள் விரும்பும் உணவினை உங்களுக்கு வழங்குவான் என்று பாணன் ஒருவன் மற்றொரு பாணரிடம் கூறுவது போல சீறூர் மன்னரின் விருந்தோம்பல் பண்பு கூறப்பட்டுள்ளது. மேலும் விருந்தினருக்கு உணவளிப்பதற்காக வரகினைக் கடனாகப் பெற்று அதனைச் சுமத்து விருந்தளிக்கும் இயல்பினை,

**"வரகுகடன் இரக்கும் நெடுந்தகை" (புறம்.327:7)**

என்றபாடல் வரிகளின் வழி அறியமுடிகிறது. தன்னை நாடிவந்த விருந்தினருக்கு இல்லை என்று கூறாமல் விருந்தளிக்கும் இயல்புடையவர்களாகச் சீறூர் மன்னர்கள் திகழ்நதுள்ளனர். வேந்துவிடு தொழிலின் மூலம் பெறப்பட்ட வெண்ணெல் அரிசியுடன் ஊன் துண்டுகள் கலந்து செய்யப்பட்ட உணவினை விருந்தினருக்குக் கொடுக்கும் இயல்புடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர்.

**"வரகும் தினையும் உள்ளவைஎல்லாம்**
**இரவல் மாக்களுக்குஈயத் தொலைந்தன;**
**…………டு அமைந்தனனே;**
**அன்னன் ஆயினும், பாண! நன்றும்**
**வள்ளத் திடும்பால் உள்ளுறைதொடரியொடு…**
**களவுப் புளியன்னவிளைகள்…..**
**…. வாடூன் கொழுங்குறை**
**கொய் குரல் அரிசியொடுநெய்பெய்துஅட்டுத்**
**துடுப்பொடுசிவணியகளிக்கொள் வெண்சோறு**
**உண்டு இனிது இருந்தபின்றை…." (புறம்.328-3-12)**

எனும் பாடல் வரிகள் சீறூர்மன்னர்கள் ஊனுடன் கலந்த உணவினை விருந்தினருக்கு வழங்கியுள்ளதனை வெளிப்படுத்துகின்றன.

சீறூர் மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டுள்ள பகுதிகளில் பொருளாதாரம் தன்னிறைவடையாத நிலையிலேயே எப்பொழுதும் காணப்பட்டுள்ளது. தங்களை நாடிவரும் பரிசிலர்கள், விருந்தினர்கள் அனைவருக்கும் விருந்தளித்ததனால் அவர்களின் உற்பத்திப்பொருட்களான வரகு, தினை போன்றவை தீர்ந்து போகிய வறுமையான சூழல்களில் விதைக்காக வைத்திருக்கும் தானியங்களை உரலில் இட்டுகுத்தி அவற்றினை உணவாக்கி விருந்தளிக்கும் இயல்புள்ளம் கொண்டவர்களாகச் சீறூர் மன்னர்களின் மனைவியர் திகழ்ந்துள்ளனர்.

**"சென்றதற் கொண்டுமனையோள் விரும்பி**
**வரகும் தினையும் உள்ளவைஎல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறுஎதிர்ப்பைப்பெறாஅமையின்**
**குரல் உணங்குவிதைத்தினைஉரல்வாய்ப் பெய்து**
**சிறிதுபுறப்பட்டன்றோ இலளே; தன்ஊர்"** **(புறம்.333:8-13)**

எனும் பாடல்வரிகள் மூலம் அறியமுடிகிறது.

தங்களை நாடிவரும் பாணர், பாடினி, விறலி போன்ற பரிசிலர்களுக்கு முல்லைநிலப் பயிர்களான வரகு, தினை, சாமை போன்றவற்றால் சமைத்த உணவினையே வழங்கியுள்ளனர். பெருநில வேந்தர்கள் இவர்கள் குடிலுக்கு வந்தாலும் இதைப் போன்ற உணவுப்பொருட்களே வழங்கப்பட்டுள்ளது என்பதனை,

**"வம்புஅணியானைவேந்துதலைவரினும்**
**உண்பதும் மன்னும் அதுவே**
**பரிசில் மன்னும் குருசில்கொண் டதுவே" (புறம்.333:17-19)**

என்னும் பாடல் வரிகளின் வழி அறியமுடிகிறது. விருந்தினர்களுக்கு எப்பொழுதும் ஓய்வில்லாமல் விருந்தளித்துக் கொண்டிருப்பதனால் சீறூர் மன்னரின் மனைவியின் கைகளுக்கு எப்பொழுதும் ஓய்வேகிடைப்பதில்லை.

**"பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும்**
**ஊணொலிஅரவமொடுகைதூ வாளே" (புறம்.334:6-7)**

என்ற வரிகள் விருந்தோம்பும் சிறப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேற்கூறப்பட்டுள்ள சான்றுகளின் வழி சீறூர்மன்னர், அவர்களின் மனைவி முதலானோர் வறுமையான காலங்களிலும் விருந்தினர்களிடையே உயர்வுதாழ்வு கருதாது அனைவருக்கும் ஒரேவகையான உணவினையே விருந்தளித்துள்ளர் என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது.

## நிறைவுரை

1. சீறூர் மன்னர்கள் முல்லைநிலப் பகுதிகளான வன்புலப் பகுதிகளையே ஆட்சி செய்துள்ளனர்.
2. சீறூர் மன்னர்கள் தங்களுக்கென்று பொருளைச் சேர்த்து வைக்காமல் அனைத்தையும் பொதுநிலையில் வைத்து அனைவருக்கும் வழங்கியுள்ளனர்.
3. சீறூர் மன்னர்கள் கைப்பொருள் இல்லாத நிலையில் கடன்பெற்று விருந்தினர்களைப் பேணியுள்ளனர்.
4. முல்லை நிலப் பயிர்களான வரகு, தினை, சாமை போன்றவற்றால் சமைத்த உணவிருந்தாக அளிக்கப்பட்டுள்ளது.
5. சீறூர் மன்னர்கள் தன்னிரைவடையாத பொருளாதார நிலையில் இருந்தாலும் இல்லையென்று கூறாமல் விருந்தினர்களை உபசரித்துள்ளனர்.

## துணைநின்ற நூல்கள்

1. இராமசுப்பிரமணியம், வ.த. புறநானூறு மூலமும் தெளிவுரையும் (உ.ஆ), திருமகள் நிலையம் தி.நகர், சென்னை.
2. மாதையன், பெ. சங்ககால இனக்குழச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ் சென்னை.
3. சுப்பிரமணியன், கா. சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.